RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING    மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-348 | 14 டிசம்பர் | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ‘சாம்பியன் பட்டம் குகேஷின் விடாமுயற்சிக்கு கிடைத்த வெகுமதி’ விஸ்வநாதன் ஆனந்த் புகழாரம்



சென்னை, டிச.14

சிங்கப்பூரில் நடைபெற்ற நடப்பு உலக செஸ் சாம்பியன் ஷிப் பட்டத்தை வென்றுள்ளார் 18 வயதான இந்திய கிராண்ட் மாஸ்டர் டி.குகேஷ்.

தமிழ் சினிமாக்களில் வருவது போல கடைசி சுற்றில் சீனாவின் டிங்லிரெனை வீழ்த்தி சாம்பியன் ஆனார். அவரது வெற்றி குறித்து ஐந்து முறை உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற விஸ்வநாதன் ஆனந்த் தன் கருத்தை தெரிவித்துள்ளார்.

“வியாழன் அன்று அந்த பையன் சாம்பியன் பட்டத்தை வென்றதை நான் கண்டேன். அவரை நான் அப்படி அழைக்கவே விரும்புகிறேன். ஏனெனில், நான் முதல் முறை உலக சாம்பியன் பட்டம் வென்றபோது அவர் பிறக்கவே இல்லை. 18 வயதான அவர், தற்போது 18வது உலக செஸ் சாம்பியன்ஷிப் தொடரில் பட்டம் வென்றுள்ளார். அவரது அமைதி மற்றும் தன்னம்பிக்கை இந்த விளையாட்டின் வருங்காலமாக இருக்கும்.

14வது சுற்றில் அவர் வெற்றி பெற்றது எனக்கு ஆச்சரியம் அளித்தது. எல்லோருமே இறுதி சுற்று டிராவில் முடியும் என எதிர்பார்த்திருந்தனர். இறுதிவரை தனது முயற்சியை தொடர்ந்த குகேஷின் விடா முயற்சிக்கு கிடைத்த வெகுமதி இது. அதே நேரத்தில் குகேஷ் தனது திட்டத்தில் உறுதியாக இருந்தார். அது அவரது ஆட்டத்தில் வெளிப்பட்டது. பின்னடைவை எதிர்கொண்டாலும் அதை எதிர்த்து நின்றார். அவரது அணுகுமுறை எனக்கு பிடித்துள்ளது.

டிங் லிரென் ஆட்டத்தை ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது 14 சுற்றிலும் சிறப்பாக விளையாடி இருந்தார். 12 வது சுற்றில் அவரது வெற்றி என்னை ஈர்த்தது. கடைசி சுற்று ஆட்டத்தில் திடீரென டிங் லிரென் தவறு செய்தார். இறுதியில் சாம்பியன் பட்டத்தை வெல்வதற்கான அந்த எட்ஜ் குகேஷ் வசம் இருந்தது.

வெற்றிக்கு பிறகு உணர்ச்சி பெருக்கில் குகேஷ் ஆனந்த கண்ணீர் சிந்தியது நெகிழ்ச்சியான தருணம். நாம் ஒவ்வொருவரும் இது மாதிரியான தருணங்களில் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவோம். நானும் எனது காலத்தில் இதே மாதிரியான உணர்வுகளை வெளிப்படுத்தி உள்ளேன். அவர் அதை வெளிப்படையாக செய்ததை பார்த்து மகிழ்ந்தேன்.

செஸ் வரலாற்றில் இளம் சாம்பியன் என்ற மகத்தான சாதனையை குகேஷ் படைத்துள்ளார். தற்போது தனது ஆட்டத்தை அவர் அனுபவித்து விளையாட வேண்டும்.” எனக் கூறியுள்ளார்.

## திண்டுக்கல் தீ விபத்து: உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி முதல்வர் உத்தரவு

சென்னை, டிச.14

திண்டுக்கல்லில் தனியார் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த சிறுமி உள்பட 6 பேரின் குடும்பத்தினருக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 லட்சம் வழங்கிட முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.



இது தொடர்பான அறிக்கையில், “திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மாநகராட்சிப் பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் நேற்று இரவு 9.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில், தாடிக்கொம்பு, பாலதிருப்பதி நகரைச் சேர்ந்த மணிமுருகன் (வயது 30, மாரியம்மாள் (வயது 50), தேனி மாவட்டம் சீலம்பட்டி அம்பேத்கர் காலனியைச் சேர்ந்த சுருளி (வயது 50), சுப்புலட்சுமி (வயது 45), திண்டுக்கல் என்.ஜி.ஓ. காலனியைச் சேர்ந்த ராஜசேகர் (வயது 36), கோபிகா (வயது 6), ராஜசேகர் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இந்த விபத்தில் பலத்த காயமடைந்தவர்கள் அருகிலுள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த தீ விபத்தில் உயிரிழந்த ஆறு நபர்களின் குடும்பத்தினருக்கு இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதுடன் முதலமைச்சரின் பொது நிவாரணநிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


நடந்தது என்ன? திண்டுக்கல்லில் உள்ள திருச்சி சாலையில் நான்கு மாடி கட்டிடத்தில் சிட்டி மருத்துவமனை இயங்கி வருகிறது. இங்கு 60க்கும் மேற்பட்ட நோயாளிகள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். வியாழக்கிழமை (டிச.12) இரவு கட்டிடத்தின் கீழ் தளத்தில் உள்ள மின்சாதனம் வெடித்து சிதறியதில் தீப்பற்றியது. தீ மளமளவென கீழ் தளத்திலும், அதைத் தொடர்ந்து மேல்தளங்களுக்கும் பரவியது. நோயாளிகள், உதவியாளர்களை உடனடியாக மருத்துவமனை ஊழியர்கள் வெளியேற்றினர்.

தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்து மாடியிலிருந்து கீழே வர முடியாமல் சிக்கிக் கொண்ட நோயாளிகளை ஏணி வைத்து மேலே சென்று ஜன்னலை உடைத்து மீட்டனர். தொடர்ந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். தீ கட்டுக்குள் வராததால் கூடுதல் தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டன. இரவு 11 மணியளவில் தீயை அணைத்தனர். அதன் பிறகு அனைத்து அறைகளிலும் சோதனையிட்டனர். விபத்தில் 6 வயது சிறுமி உள்பட 6 பேர் இறந்தது தெரியவந்தது.

## காற்றுடன் கனமழை பெய்வதால் அவசரமாக கரை திரும்பிய நாகை மீனவர்கள்

நாகப்பட்டினம், டிச.14

கடலில் பலத்த காற்று வீசுவதாலும், கனமழை பெய்வதாலும் ஆழ்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நாகை மாவட்ட மீனவர்கள் நேற்று அதிகாலையில் அவசர, அவசரமாக கரை திரும்பினர். வங்கக் கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, இலங்கை மற்றும் தமிழகத்தை நோக்கி நகர்ந்து வருவதால், நாகை மாவட்டத்தில் கடந்த 2 தினங்களாக கனமழை பெய்து வருகிறது.



இந்நிலையில், நாகை, நாகூர், வேளாங்கண்ணி, கீழையூர், கீழ்வேளூர், திருமருகல், திட்டச்சேரி, திருக்குவளை, வேதாரண்யம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் நேற்று முன்தினம் தொடங்கி நேற்று வரை தொடர்ந்து விடிய விடிய காற்றுடன் கூடிய மிதமான மழையும், கனமழையும் இடைவிடாது கொட்டி தீர்த்தது. மேலும் வங்கக்கடலில், காற்றுடன் கூடிய கனமழை பெய்து வருவதால் நாகை மாவட்ட மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடலுக்குள் இருக்கும் மீனவர்களும் உடனடியாக கரை திரும்ப அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, நாகை மாவட்டத்தில் மீன்பிடிக்கச் சென்ற பெரும்பாலான விசைப்படகு மீனவர்கள் நேற்று அதிகாலையில் அவசர, அவசரமாக கரை திரும்பினர். அவர்களது வலையிலும் குறைந்த அளவு மீன்களே கிடைத்தன.

அவற்றை மீன் வியாபாரிகள் காலையிலேயே மழையில் நனைந்தவாறு ஏலம் எடுத்துச் சென்றனர். இதனிடையே, நாகூர் கந்தூரி விழாவை முன்னிட்டு பள்ளி, கல்லூரிகளுக்கு உள்ளூர் விடுமுறை விடப்பட்டிருந்தால், மாணவ, மாணவிகள் நிம்மதியடைந்தனர்.

## கேரளாவுக்கு ரெட் அலர்ட்.. வெளுத்து வாங்கும் கனமழை சபரிமலை பக்தர்களுக்கு பறந்த எச்சரிக்கை!

சபரிமலை, டிச.14

தென் மாநிலங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. வங்கக்கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. தென் தமிழகம், வட தமிழகம், கடலோர மாவட்டங்கள், உள் மாவட்டங்கள் என பல்வேறு பகுதிகளிலும் கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது.



இந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியால் ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் கன மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக கேரளாவில் இன்று அதிகனமழை பெய்யும் என்பதால் ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பத்தனம்திட்டா, எர்ணாகுளம் மற்றும் இடுக்கி ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய மற்றும் தெற்கு கேரளாவிற்கும் இந்திய வானிலை ஆய்வு மையம் கன மழை எச்சரிக்கையை அறிவித்துள்ளது. திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழா, கோட்டயம் மற்றும் திருச்சூர் மாவட்டங்களுக்கு இன்று ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்ணூர் மற்றும் காசர்கோடு தவிர அனைத்து மாவட்டங்களுக்கும் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மன்னார் வளைகுடா பகுதியில் வலுப்பெற்ற குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் தென் தமிழக கடற்கரையை நோக்கி நகர்ந்து தீவிரம் குறையும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் கேரளாவில் அடுத்த 5 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் ஒரு சில இடங்களில் இன்று கனமழை முதல் மிக கனமழை மற்றும் பெய்ய வாய்ப்புள்ளதாக மிவிஜி கணித்துள்ளது. சபரிமலை ஐயப்பன் கோவில் அமைந்துள்ள பத்தனம்திட்டாவுக்கு ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதோடு 40 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதால் சபரிமலைக்கு வரும் பக்தர்கள் பாதுகாப்பாக பயணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சபரிமலையில் கடும் பனிமூட்டமும் நிலவி வருகிறது. இருப்பினும் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சபரிமலையில் தரிசனம் செய்து வருகின்றனர். இதனிடையே சபரிமலையில் காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருவதால் பக்தர்கள் உடல் நலத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்றும் அத்தியாவசிய மருந்துகளை கையில் வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

காய்ச்சிய நீரை மட்டுமே பருக வேண்டும் என்றும் உடல் நலப் பிரச்சனைகள் இருந்தால் காவல்துறை அல்லது பிற அதிகாரிகளை பக்தர்கள் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் தேவசம்போர்டு நிர்வாகம் தெரிவித்துள்ளது. சபரிமலைக்கு வரும் குழந்தைகள் மீது பெரியவர்கள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்றும் சரியான நேரத்தில் சாப்பிட வேண்டும் என்றும் பக்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

## அமராவதி அணையில் இதுவரை இல்லாத அளவாக விநாடிக்கு 36 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றம்

உடுமலை

அமராவதி அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த கனமழையின் காரணமாக அமராவதி அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. அணையின் பாதுகாப்பு கருதி இதுவரை இல்லாத அளவாக விநாடிக்கு 36 ஆயிரம் கன அடி உபரிநீர் வெளியேற்றப்பட்டு உள்ளது.



திருப்பூர் மாவட்டம் உடுமலை அடுத்த அமராவதி அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் நேற்று முதல் பெய்துவரும் கனமழையின் காரணமாக நள்ளிரவு முதல் உபரி நீர் ஆற்றிலும் பிரதான வாய்க்காலிலும் வெளியேற்றப்பட்டு வருகிறது.

அணையில் ஏற்கெனவே அதன் முழு கொள்ளளவான 90 அடி நிரம்பியதை அடுத்து தொடர்ந்து அமராவதி அணையில் உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. நேற்று டிச.12 ம் தேதி நள்ளிரவு 12 மணியளவில் அணைக்கு விநாடிக்கு 8,000 கன அடி நீர் வரத்து இருந்தது. உடனடியாக அணையில் இருந்து விநாடிக்கு 10,000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது.

தொடர்ந்து அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்ததால் அதிகாலை 1 மணியளவில் விநாடிக்கு 12,000 கன அடி, 1.30 மணியளவில் 25,000 கன அடி, காலை 6.30 மணியளவில் 26,000 கன அடி, காலை 7 மணியளவில் 30,000 கன அடி, 8 மணியளவில் விநாடிக்கு 36,000 கன அடி உபரி நீர் ஆற்றில் வெளியேற்றப்பட்டது. அணையில் மொத்தம் 9 மதகுகள் உள்ளன. அதில் 2 மதகுகள் பழுத காரணமாக திறக்கப்படவில்லை. எஞ்சிய 7 மதகுகள் வழியாக வெளியேற்றப்பட்ட உபரி நீர் ஆற்றை நோக்கி சீறிப் பாய்ந்தது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: கடந்த சில மாதங்களாக பருவ மழை காரணமாக அணைக்கு நீர் வரத்து இருந்து வருகிறது. கஜா புயலின் போது அணையில் இருந்து அதிகபட்சமாக விநாடிக்கு 30000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. அதன் பின்பு இன்று தான் அதிகபட்சமாக விநாடிக்கு 36000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து அணையில் நீர் கொள்ளளவு கண்காணிக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## ரயில்வே துறை தனியார் மயமாகிறதா... புதிய சட்டத்திருத்தம் எதற்காக? அஷ்வினி வைஷ்ணவ் பதில்!

புதுடில்லி, டிச.14

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நடைபெற்று வரும் சூழலில், ரயில்வே சட்டத் திருத்தம் 2024 மசோதாவை நிறைவேற்றி தருமாறு மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். அப்போது பேசுகையில், ரயில்வே சட்டத் திருத்த மசோதாவானது தனியார் மயமாக்கும் நடவடிக்கை என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். ஆனால் அது தவறான குற்றச்சாட்டு. அவர்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன்.



மிகவும் பொறுப்புடன் கேட்கிறேன். இதுபோல் தவறான விஷயங்களை பரப்பாதீர்கள். ரயில்வே துறை தனியார்மயம் ஆகாது. மத்திய அரசின் நோக்கம் என்பது ரயில்வே துறையை நவீனமயமாக்க வேண்டும். மேலும் வலுப்படுத்த வேண்டும். பயணிகள் பாதுகாப்பில் சிறிதளவும் சமரசம் செய்து கொள்ளக் கூடாது. ரயில் வழித்தடங்கள், ரயில்கள், லெவல் கிராஸிங்குகள் உள்ளிட்டவற்றின் பாதுகாப்பு விரிவாக்கம் செய்யப்படும்.


பழைய ரயில் வழித்தடங்கள் போர்க்கால அடிப்படையில் புதுப்பிக்கப்படும். ரயில் தடங் களில் இருக்கும் பிரச்சினைகளை புரிந்து கொள்ள புதிய தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்துவோம். ரயில்வே சட்டத்திருத்தத்தின் மூலம் ரயில்வே வாரியம் திறம்பட செயல்பட முடியும். தன்னாட்சி உடன் அதிக அதிகாரங்கள் வழங்கப்படும். புதிய மசோதாவின் மூலம் ரயில்வே வாரியத்தின் கட்டமைப்பை மத்திய அரசால் வரையறுக்க முடியும்.

எத்தனை உறுப்பினர்கள் இருக்கவேண்டும், அவர்களுக்கு என்னென்ன தகுதிகள் வேண்டும், துறை ரீதியிலான அனுபவம் ஆகியவை குறித்து தெளிவான வழிகாட்டுதல்களை உருவாக்கலாம். மேலும் ரயில்வே மண்டலங்களுக்கு முடிவெடுக்கும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும். அவற்றின் செயல்பாடுகள் மேம்பட வழிவகுக்கும் என்று அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இதுபற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகையில் ரயில்வே சட்டத்திருத்தம் கூட்டாட்சி கட்டமைப்பை அழித்து விடும். மத்திய அரசுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் மற்ற அரசுகள் மற்றும் அமைப்புகளுக்கு வேலையே இருக்காது. பரஸ்பர ஒத்துழைப்பு என்பது எங்கேயும் இடம்பெறாது என்று குற்றம்சாட்டினர். இதனைத் தொடர்ந்து குரல் வாக்கெடுப்பின் மூலம் ரயில்வே சட்டத்திருத்தம் 2024 மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் இதை சட்டமாக மாற்றுவதற்கு மத்திய அரசு அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுத்துள்ளது.

# பரமக்குடியில் தொடர் மழை வீட்டின் சுவர் இடிந்து விழுந்து சிறுமி பலி!





பரமக்குடி டிச14

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சுற்று வட்டார பகுதிகளில் நேற்று நள்ளிரவு முதல் பெய்த தொடர் கன மழையில் மேலாய்க்குடி பகுதியில் யாதவர் தெருவில் வசிக்கும் கூலி தொழிலாளி பால்ராஜ் என்பவரின் ஓட்டு வீட்டின் சுவர் மழையால் அதிக ஈரப்பதமாகி வெளிப்பகுதியில் இடிந்து விழுந்து அந்த நேரம் பால்ராஜின் மகள் கீர்த்திகா(5) கழிப்பறை செல்வதற்காக நடந்து சென்ற பொழுது கீர்த்திகாவின் மேல் விழுந்ததில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே பலியானார்.

அதன் பின்பு சிறுமியின் உடல் மீட்கப்பட்டு பரமக்குடி அரசு மருத்துவமனையில் பிரதே பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது இது குறித்து எமனேஸ்வரம் போலீசார்கள் விசாரணை செய்து வருகின்றனர் சிறுமி மேலாய்குடி அரசு பள்ளியில் ஒன்றாம் வகுப்பு படித்து வருகிறார் இச்சம்பவம் கிராமத்தினரிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# தாமிரபரணி ஆற்றங்கரையோர தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் நிவாரணம் முகாம்களில் தங்க ஆட்சியர் அறிவுறுத்தல்




தூத்துக்குடி டிச14

தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் அணைக் கட்டிற்கு நீர்வரத்து 26000 கனஅடியாக உள்ளது. திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டத்தில் பெய்து வரும் அதிக கன மழை காரணமாக 55000 கனஅடி தண்ணீர் சுத்தமல்லி அணைக்கட்டு பகுதியில் வந்து கொண்டிருப்பதாக தகவல் வரப்பெற்றுள்ளது. மேற்படி 55000 கனஅடி தண்ணீரானது தூத்துக்குடி மாவட்டத்திற்கு இன்னும் 3 முதல் 4 மணி நேரங்களில் வந்தடைய வாய்ப்புள்ளது.

மேலும், இந்த நீரானது திருவைகுண்டம் அணைக் கட்டிற்கு வர 5 மணி நேரமாகும் மற்றும் குற்றாலம் பகுதியில் பெய்து வரும் கனமழை காரணமாக சித்தாறு பகுதியிலிருந்து 20000 கனஅடியானது வந்தடைய வாய்ப்புள்ளது. ஆக மொத்தம் 75000 கனஅடி வெள்ள நீர் தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றிற்கு வர வாய்ப்புள்ளது.

எனவே, ஆபத்தான சூழ்நிலை காரணமாக திருவைகுண்டம் வட்டத்தில் உள்ள தாமிரபரணி ஆற்றங்கரையோர தாழ்வான பகுதிகளான கலியாவூர், அகரம், முத்தாலங்குறிச்சி, ஆராம்பண்ணை, முறப்பநாடு, கோவில்பத்து, ஆழிக்குடி, பொன்னங்குறிச்சி, ஆழ்வார்தோப்பு, புதுக்குடி ஆகிய பகுதிகளில் வசிக் கும் பொதுமக்களை உடனடியாக நிவாரண முகாம் களுக்கு செல்லுமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளது.

அதுபோல, ஏரல் வட்டத்தில் உள்ள கீழ்பிடாகை கஸ்பா, மங்கலக்குறிச்சி, ஏரல் பேரூராட்சி, உமரிக்காடு, முக்காணி, பழையகாயல், புல்லா வெளி, ஆதிநாதபுரம், ஆழ்வார் திருநகரி, அழகியமணவாளபுரம், கேம்பலாபாத், தென்திருப்பேரை, மாவடிப் பண்ணை, பால்குளம், இராஜபதி, வாழவல்லான், சேதுக்குவாய்த்தான், குருகாட்டூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களையும் உடனடியாக நிவாரண முகாம் களுக்கு செல்லுமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட பெரு வெள்ளத்தை கருத்திற்கொண்டு மேற்கண்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களில் தங்குமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளது.

மேலும், பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு அலுவலர்கள் மூலமாக தாமிரபரணி ஆற்றின் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. எனவே, பொது மக்கள் யாரும் நீர்நிலைகளில் இறங்கவோ, குளிக்கவோ, வேடிக்கை பார்க்கவோ செல்லக்கூடாது. தூத்துக்குடி மாவட்டத்தில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு தந்து நிவாரணம் முகாம்களில் தங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் செய்திக்குறிப்பில் தெரிவித் துள்ளார்.




இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் வட்டம், திருப்பாலைக்குடியில் மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவளக் கூட்டுறவு இணையம் (டாப்கோபெட்) மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை இணைந்து மீனவர்களுக்கான வரிவிலக்கு அளிக்கப்பட்ட டீசல் விற்பனை மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் டீசல் மற்றும் பெட்ரோல் விற்பனை நிலையத்தை திறந்து வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மீன்வள மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் ஆர்.கஜலெட்சுமி, மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் ஆகியோர் உள்ளனர்.

## பத்திரம் காணவில்லை

மனு எண்: 170/2023 ஆவண எண் (153/1995)

மனுதாரர்


மதுரை மாவட்டம் அழகர் கோவில் அருகே உள்ள பொய்கைகரைப்பட்டியில் உள்ள எனது வீட்டில் வைத்திருந்த ஒரிஜினல் தானம் செட்டில்மென்ட் பத்திரம் சர்வே எண் (645/2) ஆவண எண் (153/1995) காணவில்லை. நான் பல இடங்களில் தேடியும், விசாரித்தும் கிடைக்கவில்லை. ஆகவே, காணாமல் போன எனது பத்திர ஆவணங்களை தாங்கள் ஏதும் காணும் பட்சத்தில் அருகில் உள்ள காவல் நிலையத்திலோ அல்லது கீழ்கண்ட எனது அலைபேசி முகவரிக்கு தொடர்பு கொள்ளவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**M.முருகன்**
த/ பெ முத்துச்சாமி
பொய்கைகரைப்பட்டி
செல் : 9965090441

# மதுரையில் கொலை செய்து மானாமதுரையில் வீசப்பட்ட உடல் காதலால் ஏற்பட்ட விபரீதம் 3 பேருக்கு காவல்துறையினர் வலை வீச்சு







மானாமதுரை டிச14

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே உள்ள கிடாத்திருக்கை கிராமத்தைச் சேர்ந்த காசிராஜன் மகன் திருக்கண்ணன் (26)இவரது உறவினர்கள் ராமேஸ்வரம் அருகே முத்துராமலிங்கபுரத்தில் வசித்து வருகின்றனர்.

திருக்கண்ணன் அங்கு அடிக்கடி சென்ற போது அவருக்கு சகோதரி முறை கொண்ட முத்திருளாண்டி மகள் சத்யா (22)என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு காதலித்துள்ளனர். சில மாதங்களுக்கு முன்பு இருவரும் தலைமறைவாகினர். முத்திருளாண்டி தனது மகளை காணவில்லை என்று ராமேஸ்வரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். காவல்துறையினர் இருவரையும் கண்டுபிடித்து அவரவர் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

மீண்டும் அதே போல் சில வாரங்களுக்கு முன் மீண்டும் இருவரும் தலைமறைவாயினர். மதுரையில் இருவரும் தங்கியிருப்பதை அறிந்து தந்தை முத்திருளாண்டி, அவரது மகன் முத்துமணி மற்றும் உறவினர்கள் அங்கு சென்றனர். கடந்த டிசம்பர் 10ஆம் தேதி அன்று சத்யாவை தனியாக ஒரு இடத்தில் பாதுகாப்பாக தங்க வைத்துவிட்டு திருக்கண்ணனை மதுரை மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்ட் அரசு மதுபான கடை அருகே அடித்து கொலை செய்தனர்.

உடலை எடுத்து வந்து இரவு 8:30 மணிக்கு சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மதுரை ராமேஸ்வரம் செல்லும் நான்கு வழி பாதை மேலப் பசலை மேம்பாலத்தின் கீழே உள்ள கண்மாயில் உடலை வீசி விட்டு சென்றுள்ளனர். அதன் பின்னர் நேற்று முன்தினம் காலை மானாமதுரை உட் கோட்ட துணை கண்காணிப்பாளர் நிரேஷிடம் இக் கொலை வழக்கில் ஈடுபட்ட முத்திருளாண்டி, முத்துமணி, உறவினர் கருப்புச்சாமி ஆகியோர் சரணடைந்து, திருக்கண்ணனை கொலை செய்ததாகவும் அவரது உடலை கண்மாயில் வீசியதாக தெரிவித்துள்ளனர்.

மானாமதுரை சார்பு ஆய்வாளர் அகிலன் மார்டின் தலைமையில் காவலர்கள் திருகண்ணனின் உடலை அழுகிய நிலையில் கண்மாய் தண்ணீருக்குள் கிடந்தை கைப்பற்றி சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு உடற்கூறாய்வுக்காக அனுப்பி வைத்தனர். சரணடைந்தவர்கள் அளித்த தகவலின் பேரில் கொலை சம்பவத்தில் தொடர்புடைய தவம்,சீனி,ஜமால் ஆகியோரை கைது செய்து பூவலிங்கம், முருகன் மற்றும் 3 பேரை காவல்துறையினர் தேடி வருகின்றனர்.

# தென்காசி மாவட்டத்தில் வரலாறு காணாத கனமழை ஒரே நாளில் 1884 மில்லி மீட்டர் மழைப்பொழிவு பதிவு





தென்காசி டிச14

தென்காசி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கொட்டித் தீர்த்து வரும் கனமழை காரணமாக மாவட்டத்திலுள்ள பல்வேறு நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து காணப்பட்டு வருகிறது.

குறிப்பாக, மாவட்டத்தில் உள்ள நீர்த்தேக்கங்களான அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கம், குண்டாறு நீர்த்தேக்கம், கருப்பாநதி நீர்த்தேக்கம், கடனாநிதி நீர்த்தேக்கம், ராமாநதி நீர்த்தேக்கம் உள்ளிட்ட அனைத்து நீர்த்தேக்கங்களிலும் தற்போது தண்ணீர் வரத்து அதிகரித்து காணப்பட்டு வரும் நிலையில், நீர்நிலைகள் அருகே யாரும் செல்ல வேண் டாம் எனவும் மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், ராமாநதி அணையானது தற்போது தனது முழு கொள்ளளவை எட்டி நிரம்பும் தருவாயில் உள்ள நிலையில், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 1550 கன அடிக்கு மேல் நீரானது வெளியேற்றம் செய்யப்பட்டு ,வருகிறது வெள்ள அபாய எச்சரிக்கையானது அந்த பகுதியில் உள்ள மசூதிகளில் உள்ள ஒலிபெருக்கிகள் மற்றும் ஒலி பெருக்கிகள் வாயிலாக ராமநதி ஆற்றுப்படுகை கரையோரம் வசித்து வரும் மக்களுக்கு தற்போது விடுக்கப்பட்டுள்ளது. மேலும், கரையோரம் வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்கவும் நீர்நிலைகள் அருகே யாரும் செல்ல வேண்டாம் எனவும் மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தென்காசி மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணி முதல் அதிகாலை 6 மணி வரை சுமார் 1884 மில்லி மீட்டருக்கு மேலாக வரலாறு காணாத கனமழை கொட்டி தீர்த்து உள்ளது.

அதன்படி, தென்காசி சுற்று வட்டார பகுதியில் அதிகபட்சமாக 230 மில்லி மீட்டர் மழைப் பொழிவும், ராமநதி அணைப் பகுதியில் 238 மில்லி மீட்டர் மழைப்பொழிவும், குண்டாறு அணைப்பகுதியில் 208 மில்லி மீட்டர் மழைப்பொழியும், செங்கோட்டை சுற்று வட்டார பகுதியில் 240 மில்லி மீட்டர் மழைப்பொழிவும், ஆய்க்குடி சுற்றுவட்டார பகுதியில் 312 மில்லி மீட்டர் மழைப்பொழிவும், சங்கரன் கோவில் சுற்றுவட்டார பகுதியில் 146 மில்லிமீட்டர் மழை பொழிவும் என ஒட்டு மொத்தமாக அதிகாலை 6 மணி வரை மாவட்டத்தில் 1884 மில்லி மீட்டர் மழைப்பொழிவு பதிவாகியுள்ளதாக தென்காசி மாவட்ட ஆட்சியர் தெரிவித் துள்ளார்.

# தென்காசியில் கல்லூரணி, திப்பணம்பட்டி ஆகிய கிராமங்களில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மனுநீதிநாள் முகாம்



தென்காசி, டிச.14

தென்காசிமாவட்டம், கல்லூரணி, திப்பணம்பட்டி ஆகிய கிராமங்களுக்கு திப்பணம்பட்டி மலையப்பபுரம் அருஞ்சுனை கலையரங்கத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் தலைமையில் மனுநீதிநாள் முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ,கே.கமல் கிஷோர் தெரிவித்தாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் தமிழ்நாடு அரசின் அனைத்து திட்டங்களும் சென்றடைந்து பயனடைய வேண்டும் என அறிவுறுத்தி உள்ளார்கள்.

அதனடிப்படையில் இன்றைய தினம் மனுநீதி நாள் முகாம் நடைபெற்று வருகிறது. இம்முகாமில் அரசுத்துறை அலுவலர்கள் அனைவரும் தங்கள் துறை சார்ந்த திட்டங்களை பொதுமக்கள் அறிந்திடும் வகையில் எடுத்துரைத்தார்கள். தமிழ்நாடு அரசு அறிமுகப் படுத்தியுள்ள அனைத்து திட்டங்களையும் பொதுமக்கள் கேட்டறிந்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்தார்.

இம்முகாமில் வருவாய்த் துறையின் மூலம் 08 பயனாளிகளுக்கு ரூ.5,23,190/ மதிப்பிலான நத்தம் வரன்முறை பட்டாவிற்கான ஆணையினையும், 06 பயனாளிகளுக்கு இணையவழி பட்டாக்களையும், 01 பயனாளிக்கு தரிசு நிலத்திற்கான சான்றினையும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு இயற்கை மரணத்திற்கான உதவித் தொகையினையும் (ணிசிஷி மூலம் ரூ.20,000/ வரவு வைத்தல்), 08 பயனாளிகளுக்கு உழவர் அட்டைகளையும், வேளாண்மைத்துறை மூலம் 01 பயனாளிக்கு மாநில வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 10 கிலோஜிங்க் சர்பேட் விநியோகத்தில் ரூ.440/ மானியமும், உணவு மற்றும் ஊட்டச் சத்து பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் 02 பயனாளிகளுக்கு 2 கிலோ உளுந்து நுண்ணூட்ட உரம் விநியோகத்தில் தலா ரூ.118/ மானியமும், 01 பயனாளிக்கு மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாற்றுப்பயிர் திட்டம் உளுந்து விதை 8 கிலோ, சூடோமோனாஸ் 1 கிலோ ரைசோபியம் 0.5 மற்றும் பாஸ்போக்ட்ரியா 0.5 இல் ரூ.1200/ மானியமும் தோட்டக் கலைத்துறை மூலம் 1 பயனாளிக்கு வெண்டை விதைகளையும், 1 பயனாளிக்கு மிளகாய் விதைகளையும் என மொத்தம் 30 பயனாளிகளுக்கு 5.45 இலட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ,கே.கமல் கிஷோர் வழங்கினார்.

மனுநீதி நாள் முகாமில், தோட்டக்கலை துறை, வேளாண்மை துறை, சமூக நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் பல்வேறு துறைகளின் மூலம் அரசு திட்டங்கள் குறித்து பொது மக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர் கள் மற்றும் ஏராளமான பொது மக்கள் பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில். தென்காசி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.லாவண்யா, மாவட்ட ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் சாக்ரடீஸ், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தலைவர் திருமதி. காவேரி சீனித்துரை மற்றும் அனைத்துதுறை அலுவலர்கள். பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தூத்துக்குடி மாவட்டத்திற்கு இந்திய வானிலை ஆய்வு மையத்தால் மிக கனமழை (ரெட் அலர்ட்) எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, கனமழையினால் ஏற்படும் வெள்ளப் பாதிப்புகளை தடுப்பது குறித்தும், நிவாரண முகாம்கள் தயார் நிலைப்படுத்துல் குறித்தும் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத்துறை, பொதுப்பணித்துறை, பேரிடர் மேலாண்மைக்குழு, பொது சுகாதாரத்துறை உட்பட அனைத்துத்துறை சார்ந்த அலுவலர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத் இ.ஆ.ப., அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார். இவ் ஆலோசனையின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சீனிவாசன் அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று முல்லைப் பெரியாறு அணை பராமரிப்பு பணி கட்டுமானப் பொருட்களை எடுத்து செல்ல கேரள வனத்துறை அனுமதி

தேனி டிச14

தேனி மாவட்டம், உத்தம பாளையம் வட்டம் முல்லைப் பெரியாறு அணையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள, வாகனங்கள் மூலம் கட்டுமானப் பொருட்களை எடுத்து செல்ல கேரள வனத்துறையிடம் முறையாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

தேனி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களின் குடிநீர், பாசன ஆதாரமாகத் திகழும் முல்லைப்பெரியாறு அணை தமிழககேரள எல்லையில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு அரசின் பொதுப் பணித்துறையின் சார்பில், முல்லைப்பெரியாறு அணைப் பகுதியில் ஆண்டுதோறும்



மராமத்து பணி மேற்கொள்ளப்படுவது வழக்கம்.

இந்நிலையில் பொதுப் பணித்துறையின் சார்பில் கடந்த டிசம்பர் 4 ஆம் தேதி, தேனியிலிருந்து 2 தனியார் லாரிகளில் தளவாட பொருள்களை ஏற்றிக் கொண்டு, இடுக்கி மாவட்டம், குமுளி வட்டம் வல்லக்கடவு வழியாக முல்லைப்பெரியாறு அணைக்கு கொண்டு சென்றனர்.

சோதனைச் சாவடியில் முல்லைப்பெரியாறு அணைக்கு பொருள்கள் எடுத்துச் செல்ல கேரள வனத்துறையினரிடம் உரிய அனுமதி பெற்ற பின்னரே அனுமதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தேனி மாவட்ட ஆட்சியரால் தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமைச்செயலாளர் (நீர் வளத் துறை) அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, கேரள அரசின் மூலம் வல்லக்கடவு சோதனை சாவடி மற்றும் தேக்கடி படகு இறங்கு தளம் வழியாக முல்லை பெரியாறு அணை பகுதிக்கு கட்டுமான பொருட்களை கொண்டு செல்வதற்கு அனுமதி பெறப் பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா, தெரிவித்துள்ளார்.

# இராமநாதபுரம் கருவூலத்துறை சார்பில் அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம்

இராமநாதபுரம், டிச.14

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கருவூலத்துறை சார்பில், ஓய்வூதிய பரிந்துரையை களஞ்சியம் செயலியில் அனுப்ப அறிவுறுத்தல் தொடர்பான அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில், வரும் நாட்களில் ஓய்வூதியம் முன்மொழிவுகளை மாநில முதன்மை கணக்காயர், சென்னை அலுவலகத்திற்கு களஞ்சியம் 2.0 தளத்தின் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும். அனுப்ப வேண்டியவற்றை டிசம்பர் 31ம் தேதிக்குள் களஞ்சியம் செயலியில் அனுப்ப வேண்டும். நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வருமான வரி தொடர்பான கோப்புகளை சரிசெய்து கருவூல அலுவலரிடம் அளிக்க வேண்டும். மேலும் விடுபட்ட அல்லது தவறுதலாக உள்ள மின்கட்டண இணைப்புகளை சரிசெய்து பதிவேற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட கருவூலஅலுவலர் வ.சண்முக சுந்தரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வீ.பிரபாகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) கல்யாண சுந்தரம் மற்றும் அனைத்துத்துறை சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேனி கண்டமனூர் அருகே வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் கைது

கண்டமனூர், டிச.14

தேனி மாவட்டம் கண்டமனூர் அருகே சமத்துவபுரம் பகுதியைச் சேர்ந்த தாமரைக்கண்ணன் என்பவரது மகன் சிரஞ்சீவிகுமார் இவர் அடக்கம்பட்டியில் இருந்து சமத்துவபுறம் பகுதிக்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது பொன்னம்மாள் பட்டியைச் சேர்ந்த முருகன் மகன் மோகன் மற்றும் அடைக்கம்பட்டியைச் சேர்ந்த பாண்டியன் மகன்



விக்னேஷ் இவர்கள் இருவரும் சேர்ந்து நடந்து சென்ற சிரஞ்சீவி குமாரை வழிமறித்து கத்தியை காட்டி பணத்தை பறித்து விட்டு யாரிடமும் கூறினால் கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளனர் பாதிக்கப்பட்ட சிரஞ்சீவிகுமார் கண்டமனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் அடிப்படையில் கண்டமனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மலைச்சாமி வழக்கு பதிந்து இருவரையும் கைது செய்து விசாரித்து வருகிறார்

# தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று முல்லைப் பெரியாறு அணை பராமரிப்பு பணி கட்டுமானப் பொருட்களை எடுத்து செல்ல கேரள வனத்துறை அனுமதி

தேனி டிச14

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் முல்லைப் பெரியாறு அணையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள, வாகனங்கள் மூலம் கட்டுமானப் பொருட்களை எடுத்து செல்ல கேரள வனத்துறையிடம் முறையாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

தேனி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களின் குடிநீர், பாசன ஆதாரமாகத் திகழும் முல்லைப்பெரியாறு அணை தமிழககேரள எல்லையில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறையின் சார்பில், முல்லைப்பெரியாறு



அணைப்பகுதியில் ஆண்டுதோறும் மராமத்து பணி மேற்கொள்ளப்படுவது வழக்கம். இந்நிலையில் பொதுப்பணித்துறையின் சார்பில் கடந்த டிசம்பர் 4ஆம் தேதி, தேனியிலிருந்து 2 தனியார் லாரிகளில் தளவாட பொருள்களை ஏற்றிக் கொண்டு, இடுக்கி மாவட்டம், குமுளி வட்டம் வல்லக்கடவு வழியாக முல்லைப்பெரியாறு அணைக்கு கொண்டு சென்றனர்.

சோதனைச் சாவடியில் முல்லைப்பெரியாறு அணைக்கு பொருள்கள் எடுத்துச் செல்ல கேரள வனத்துறையினரிடம் உரிய அனுமதி பெற்ற பின்னரே அனுமதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தேனி மாவட்ட ஆட்சியரால் தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமைச்செயலாளர் (நீர்வளத்துறை) அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, கேரள அரசின் மூலம் வல்லக்கடவு சோதனை சாவடி மற்றும் தேக்கடி படகு இறங்கு தளம் வழியாக முல்லை பெரியாறு அணை பகுதிக்கு கட்டுமான பொருட்களை கொண்டு செல்வதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா, தெரிவித்துள்ளார்.

# தேவகோட்டையில் வருவாய் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 37 விவசாயிகளுக்கு ரூ.12.20 இலட்சம் மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவி

தேவகோட்டை டிச14

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டார வளர்ச்சி அலுவலகக் கூட்டரங்கில் நேற்று (13.12.2024) வட்டளவில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வேளாண் பெருங்குடி மக்களின் நலன் காத்து வருகிறார்கள். அதன்படி, விவசாயிகளின் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டும், வேளாண் தொழிலை உழவர்கள் எவ்வித இடையூறு இன்றியும் தேவையான அனைத்து வசதிகளுடன் மேற்கொள்ளும் பொருட்டும், பிரதி மாதந் தோறும் விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாதத்தில் கடைசி வெள்ளிக் கிழமை அன்று நடத்தப்பட்டு வருகிறது. அதனை, மேலும் விரிவுபடுத்திடும் பொருட்டு, விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில், வருவாய் கோட்ட ளவில் இரண்டாம் வெள்ளிக் கிழமை அன்றும், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்திட திட்டமிடப்பட்டு, அதன் அடிப்படையில் இன்றையதினம் தேவகோட்டை வருவாய் கோட்ட அளவில், இக்கூட்டம் சிறப்பாக நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், புதிய கோரிக்கைகள் தொடர்பாகவும் எடுத்துரைக்கப் படுகிறது.

குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்தில் தேவையான நிலங்களில் தடுப்பணைகள் ஏற்படுத்தி, நிலத்தடி நீர் மட்டத்தினை பாதுகாத்திடவும், நீர் நிலையிலுள்ள ஆக்கிரமிப்புக்களை உடனடியாக அகற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வரவும்,





விவசாய நிலங்களை வன விலங்குகள் சேதப்படுத்தாமல் பாதுகாத்திடவும், விவசாயிகளின் கோரிக்கைகளுக்கிணங்க, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், விவசாயிகள் அரசின் திட்டங்களின் பயன்களை முழுமையாக பெற்றிடவும், தேவையான சான்றிதழ்களை வழங்கிடவும், துறை சார்ந்த அலுவலர்கள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், விவசாயிகளுக்கான மின் விநியோகங்களை சீரான முறையில் வழங்கிடவும், தேவையான உரங்களை இருப்பு வைத்திடவும், வங்கிகளின் மூலம் கடனுதவிகள் வழங்கி வேளாண் சார்ந்த புதிய தொழில் தொடங்கிட உறுதுணையாக இருந்திடவும், கடனுதவிக்குரிய மானியத்தொகையினை தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கிடவும், குறிப்பாக இக்கூட்டத்தின் வாயிலாக விவசாயிகள் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு கோரிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி, அரசின் திட்டங்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, துறை சார்ந்த அலுவலர்கள் உரிய விபரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், பரிசீலனையிலுள்ள கோரிக்கைகள் மீது உடனடி தீர்வு காணும் பொருட்டு, உரிய களஆய்வுகளும் மேற்கொண்டு, அந்நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கும்படியும் மாவட்ட ஆட்சியர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், இக்கூட்டத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பில் என்.என்.552 கண்ணங்குடி, என்.என்.597 அனுமந்தக்குடி மற்றும் என்.என்.535 நாகாடி ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களைச் சார்ந்த மொத்தம் 15 பயனாளிகளுக்கு ரூ.8,71,650/ மதிப்பீட்டிலான நெல் பயிர் கடனுதவிக்கான ஆணைகளையும், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் சார்பில் 01 பயனாளிக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் 202425ன் கீழ் ரூ.3,750/ மதிப்பீட்டில் காய்கறி சாகுபடியினை ஊக்குவித்தல் வெண்டை விதை மற்றும் இடு பொருட்களையும், 02 பயனாளிகளுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கம் 202425ன் கீழ் ரூ.16,799/ மதிப்பீட்டிலான பரப்பு விரிவாக்கம் உதிரிமலர் செண்டுமல்லி ஸ்ரீ விதை மற்றும் இடுபொருட்களையும், பரப்பு விரிவாக்கம் கொய்யா இடுபொருட்களையும், 02 பயனாளிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் 202425ன் கீழ் ரூ.21,750/ மதிப்பீட்டிலான காய்கறி சாகுபடியினை ஊக்குவித்தல் வெண்டை இடுபொருட்களையும், பரப்பு விரிவாக்கம் மா இடு பொருட்களையும், வேளாண்மைத்துறையின் சார்பில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 04 பயனாளிகளுக்கு ரூ.16,600/ மதிப்பீட்டிலான தெளிப்பான்களையும், 02 பயனாளிகளுக்கு NEMO-OILSEED திட்டத்தின் கீழ் ரூ.388/ மதிப்பீட்டிலான எள் விதைகளையும், 03 பயனாளிகளுக்கு விதைகிராம திட்டத்தின் கீழ் ரூ.306/ மதிப்பீட்டிலான உளுந்து, ராகி ஆகிய விதைகளையும், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் 02 பயனாளிகளுக்கு ஆடாதோடா, நொச்சி ஆகிய இடு பொருட்களையும், வேளாண் இயந்திரமாக்குதல் துணை இயக்கத்தின் கீழ் 02 பயனாளிகளுக்கு ரூ.2,72,750/ மதிப்பீட்டிலான ரோட்டவேட்டர்களையும், தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் 01 பயனாளிக்கு ரூ.3,000/ மதிப்பீட்டிலான ராக விதைகளையும், மாநில வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு ரூ.690/ மதிப்பீட்டிலான ஜிங்க் சல்பேட் உரங்களையும், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் 02 பயனாளிகளுக்கு ரூ.11,980/ மதிப்பீட்டிலான மண்புழு உரப் படுகைகளையும் என ஆக மொத்தம் 37 விவசாயிகளுக்கு ரூ.12,19,663/ மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) (பொ) செல்வி, வேளாண்மை துறை துணை இயக்குநர் சண்முக ஜெயந்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய ஊராட்சிகளில் ரூ.1.12 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்த அமைச்சர்

திண்டுக்கல் டிச13

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் அம்மாபட்டி, கோனூர் ஆகிய ஊராட்சிகளில் ரூ.1.12 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நேற்று திறந்து வைத்தார்.





திண்டுக்கல் மாவட்டம், ரெட்யார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், அம்மாபட்டி ஊராட்சி அம்மாபட்டியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ.28.01 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம், கோனூர் ஊராட்சி ஒன்றியம் கோனூரில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத் தில் ரூ.14.00 இலட்சம் மதிப் பீட்டில் கட்டப்பட்ட புதிய அங்கன் வாடி மைய கட்டடம், ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலையம், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.28.01 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம் என மொத்தம் ரூ.1.12 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இவ்விழாவில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் செயல்படுத்தி வருகிறார். பொதுமக்கள் வாழ்க்கைக்கு தேவையான கல்வி, குடிநீர் வசதி, சாலை வசதி, போக்குவரத்து வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நிறைவேற்றிட பல்வேறு திட்டங்களை அறிவித்து, அந்த திட்டங்களின் பயன்கள் கடைகோடி கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொறுப்பேற்ற பின்னர் கடந்த 3 ஆண்டுகளில் ஆத்தூர் பகுதியில் பல்வேறு துறைகள் சார்பில் சுமார் ரூ.300 கோடி மதிப்பீட்டிலான திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 20242025 ஆம் நிதியாண்டில் மட்டும் சுமார் ரூ.67.00 கோடி அளவிற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆத்தூர் தொகுதியில் தொடங்கப்பட்ட 2 கல்லூரிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக சுமார் ரூ.100.00 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் ஒரு கல்லூரி கட்டடம் முழுமையடையும் நிலையில் உள்ளது.

ரொட்டியார்சத்திரம் பகுதி பொதுமக்களுக்கு பயன்படுத்தும் வகையில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பகுதி பொதுமக்கள் திருமண விழாவினை நகர்பகுதிக்கு சென்று நடத்துவதற்கு சிரமம் ஏற்படுவதால், இப்பகுதியில் பெரிய அளவில் திருமண மண்டபம் கட்டப்படவுள்ளது. மேலும், இப்பகுதியில் கால்நடை மருத்துவமனை, ஊராட்சி மன்ற அலுவலகம், துணை சுகாதார நிலையம், சாலை, அங்கன்வாடி கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

100 நாள் வேலை திட்டத்தை பொறுத்தவரை ஒன்றிய அரசு வழங்கும் நிதி தாமதமாக கிடைக்கிறது. இத்திட்டத்தில் வேலைநாட்கள் மற்றும் ஊதியத்தையும் அதிகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் திட்டத்தில் 1.18 கோடி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் தகுதியுள்ளவர்கள் விடுபட்டிருந்தால் அவர்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, வருங்காலத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் ஆதரவு அளிக்க வேண்டும், என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசினார்.

இவ்விழாவில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ப.க.சிவகுருசாமி, ரெட்டியார்சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர் கிருஷ்ணன், மலரவன், கோனூர் ஊராட்சி மன்ற தலைவர் வெள்ளத்தாய் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் பகுதியில் கன மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



நெல்லை மாவட்டம் அதிகனமழை காரணமாக மணிமுத்தாறு அருவி அருகே பாறை உருண்டு சாலை துண்டிப்பு. இதன் காரணமாக மாஞ்சோலைக்கு போக்குவரத்து தூண்டிப்பு. பொதுமக்கள் அவதி.



திருநெல்வேலி மாவட்டம் சுத்தமல்லி கிராம் அருந்ததியர் காலனியைச் சேர்ந்தவர் ராஜேந்திரன் கூலித் தொழிலாளியான இவரது வீடு நேற்று இரவு அப்பகுதியில் விடிய விடிய பெய்த கனமழையால் இடிந்து விழுந்தது. முன்னதாக வீடு சேதமாக இருப்பதை அறிந்த ராஜேந்திரன் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் அருகில் உள்ள உறவினர் வீட்டில் படுத்து தூங்கியதால் உயிர் சேதங்கள் தவிர்க்கப்பட்டது.




சிவகங்கை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் மற்றும் போக்குவரத்து துறை சார்பில் மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் பாதுகாப்பான பயணம் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இதில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பாக மாவட்ட மகளிர் அதிகாரம் மையப் பணியாளர்கள் மற்றும் ஒருங்கிணைந்த சேவை மையப் பணியாளர்களால் பாதுகாப்பான பயணம் குறித்தும் பெண்கள் 181 குழந்தைகளுக்கான 1098 உதவி எண்கள் சமூக நலத்திட்டங்கள் குறித்தும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இதில் போக்குவரத்து சார்பு ஆய்வாளர் ஜெயமாரி, சைல்ட் லைன் அலுவலர், சத்தியமூர்த்தி, சரவணன். சமூக நலத்துறை அலுவலர்கள் நித்யா,பவானி ஈஸ்வரி மைய நிர்வாகி சுகன்யா செல்வி. சங்கரா அபர்ணா கலந்து கொண்டனர்.

## கம்பத்தில் ஆம்னி பேருந்து நிலையம் கலெக்டர் ஆய்வு

கம்பம், டிச :13



தேனி மாவட்டம் கம்பத்தில் ஆம்னி பேருந்து நிலையம் அமைக்கப்படும் இடத்தை தேனி மாவட்ட கலெக்டர் ஷஜீவனா பார்வையிட்டார்.

கம்பத்திலிருந்து சென்னை, பெங்களூரு, பாண்டிச்சேரி தொலைதூரங்களுக்கு செல்ல 50 க்கும் மேலான ஆம்னி பேருந்துகள் இயக்கப்படுகிறது. இதனால் நகரில் போக்குவரத்து நெரிசல் ஏற்ப்பட்டது, விபத்துகளும் ஏற்பட்டது.

அதன் காரணமாக நகராட்சி நிர்வாகம் சார்பில் ஆம்னி பேருந்துகள் பயணிகளை ஏற்றி இறக்கி செல்ல தனியாக பேருந்து நிலையம் அமைக்க நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றியது.

அதன் படி நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் கட்டப்படுகிறது. இந்த பணியை மாவட்ட கலெக்டர் ஷஜீவனா ஆய்வு செய்தார். அவருக்கு நகர்மன்ற தலைவர் வனிதா நெப்போலியன் விளக்கம் தெரிவித்தார். உடன் ஆணையர் மற்றும் பொறியாளர் இருந்தனர்.

# தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணைய தலைவருக்கு அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் தலைவர் கடிதம்

சென்னை டிச14



TNRERA தலைவருக்கு FAIRA தலைவர் டாக்டர் ஆ.ஹென்றி கடிதம். தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணைய தலைவருக்கு அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் ஆ.ஹென்றி. 12.12.24.. கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதியுள்ள கடிதத்தில் TNRERA சார்பில் சமீபத்தில் சட்ட திருத்தம் கொண்டு வந்து நடைமுறைப்படுத்தியுள்ள மக்களுக்கு உதவாத மண்ணாங் கட்டி சட்டங்களை திரும்ப பெற்று, பொதுமக்களும் வீட்டுமனை அபிவிருத்தியாளர் களும் ரியல் எஸ்டேட் ஒழுங்கு முறை ஆணையத்தில் பதிவு செய்ய விண்ணப்பித்து நிலுவை யில் உள்ள 2680 திட்டங்களை விரைவில் பதிவுசெய்து உத்தரவு வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளார்.

ரியல் எஸ்டேட் துறையை அடியோடு நசுக்கும் ஒழுங்கு முறை ஆணையத்தின் புதிய மண்ணாங்கட்டி சட்ட திட்டங் களையும் சட்ட திருத்தங் களையும், நடைமுறைகளையும் மாற்றம் செய்ய வேண்டி அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் நிறுவனர் தேசியத் தலைவர் டாக்டர் ஆ.ஹென்றி கடிதம் எழுதி உள்ளார்.

மேலும் அவர் எழுதியுள்ள கடிதத்தில்.

தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் துவங்கப்பட்டத்தின் நோக்கம், ரியல் எஸ்டேட் துறையில் வாங்குவோர் மற்றும் விற்பவர் களைப் பாதுகாப்பது, முதலீட் டாளர்களுக்கு நம்பகத்தன் மையை ஏற்படுத்தி ரியல் எஸ்டேட் துறையில் முதலீடு செய்ய உதவுவது, கட்டிட மனை விற்பனைத் துறையினை முறைப்படுத்தி மேம்படுத்த வேண்டியும் மற்றும் மாநில அளவில் கட்டிட மனை விற்பனை துறையினை கண்காணிக்கவும், கட்டிட மனை விற்பனை சம்பந்த மான வழக்குகளை விசாரிக் கவும் வீடு மற்றும் மனை வாங்கு பவர்கள் நலனை பாதுகாப்பதும் இத்துறையில் முதலீட்டை அதிகரித்து ரியல் எஸ்டேட் துறையின் வளர்ச்சிக்கு உதவிடுவதாகும்.

மேலும் TNRERAவின் சட்டம் 2016ன் கீழ் போதிய மற்றும் தேவையான விதிகளை வகுத்து கட்டிட மனை விற்பனைத் துறையினை கண்காணித்து வழக்குகளை விசாரிக்கவும், கட்டிட மனை விற்பனை ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் உருவாக்க இச்சட்டம் வழிவகை செய்கின்றது.

மேலும் தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையமானது மைய அரசி னால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட பூர்வமான அமைப்பென்றாலும், அதன் செயல் பாடுகள் அனைத்தும் தமிழ்நாடு அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையின் கட்டுப்பாட்டின் கீழ்தான் இயங்கு கின்றது. இந்தத் துறையானது மிகச்சிறந்த முறையில் செயல்பட்டு பொதுமக்களுக்கு சேவை செய்து வருவதாக மக்கள் நம்புகின்றனர்.

ஆனால் சமீபகாலமாக தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல கடுமையான திட்டங்களால், பெருமளவில் கட்டுமானம் உள்ளிட்ட ரியல் எஸ்டேட் வணிகம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன.

புதிய சட்ட திருத்தத்தின்படி, சென்னை மாநகராட்சி பகுதியில் தலா யூனிட் ஒன்றுக்கு ரூபாய் ரூ.15,000/ அபராதமும், மதுரை, திருச்சி, சேலம், ஈரோடு, திருப்பூர், ஆவடி, தாம்பரம், வேலூர், திருநெல்வேலி, தஞ் சாவூர், தூத்துக்குடி மாநகரா ட்சிகளில் யூனிட் ஒன்றுக்கு தலா ரூபாய் ரூ.12,000/ அபராதமும், சென்னை பெருநகர எல்லை யில் வரும் நகராட்சிகள், பேரூ ராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் திண்டுக்கல், ஓசூர், நாகர் கோவில், கடலூர், காஞ்சிபுரம், கரூர், சிவகாசி, கும்பகோணம், காரைக்குடி, நாமக்கல், புதுக்கோட்டை, திருவண்ணா மலை மாநகராட்சிகளில் யூனிட் ஒன்றுக்கு தலா ரூபாய் ரூ.10,000/ அபராதமும், பிற நகராட்சிகளில் யூனிட் ஒன்றுக்கு தலா ரூபாய் ரூ.6,000/ அபராதமும், பிற பேரூராட்சிகளில் யூனிட் ஒன்றுக்கு தலா ரூபாய் ரூ.4,000/ அபராதமும், மற்றும் அனைத்து பிற ஊராட் சிகளில் யூனிட் ஒன்றுக்கு தலா ரூபாய் ரூ.3,000/ அபராதமும் நிர்ணயம் செய்து புதிய உத்தரவை பிறப்பித்துள்ள உத்தரவின் நோக்கமானது, ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் தங்களது துறை சார்ந்த செயல்பாடுகளில் கூடுதல் கவனம் செலுத்தி குறைகளை களைந்து பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து, தண்டத்தொகை வசூலிப்பதில் மட்டுமே அதிக கவனம் செலுத்தும் செயலாகவே தெரிகிறது. இத்தகைய போக்கு ஏற்புடையதல்ல.

காரணம் வீட்டுமனை அபிவிருத்தி மற்றும் கட்டுமான திட்டங்களை ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தில் பதிவு செய்யாமல் விதிமுறை களை மீறி மனைகளை விற்ப வர்களுக்கு மேற்குறிப்பிட்ட வகையில் அபராதம் விதிப்பது மட்டுமல்லாது அபராத தொகையை இரண்டு மடங்காக உயர்த்தினாலும் எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

அதே சமயம் ரியல் எஸ்டேட் ஆணையத்தில் பதிவு செய் தும் குறிப்பிட்ட நேரத்தில் அனுமதி கொடுக்காமல் பல காரணங்களை காட்டி கிடப்பில் போடுவதின் காரணமாகவும் மற்றும் எதிர்பாராத அவசர தேவைக்காக பதிவு அலுவ லகத்தில் பதிவு செய்யும் அபிவிருத்தியாளர்களுக்கும் அபராதம் விதிப்பதென்பது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. ஆகவே இந்த அபராத தொகையை ரத்து செய்ய வேண்டும்.

தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் மேற்கூறியவைகளை கவ னத்தில் கொண்டு புதிய வீட்டு மனை பிரிவுகளை ஒரு வாரத் திற்குள்ளாக பதிவு செய்து அதற்குரிய பதிவு உத்தரவையும், குடியிருப்பு பகுதிகளுக்கு இரண்டு வாரத்தில் பதிவுசெய்து அதற்குரிய உத்தரவையும் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும். மேலும் ரியல் எஸ்டேட் துறையை நசுக் கும் வகையில் உள்ள உப்பு சப்பு இல்லாத ஒன்றுக்கும் உதவாத சட்ட திருத்தங்களை யும், மக்களுக்கு உதவாத மண்ணாங்கட்டி சட்ட திட்டங்களையும், தான்தோன் றித்தனமாகவும் தன்னிச்சை யாகவும் உயர்த்தியுள்ள உச்சபட்ச தண்ட தொகை யையும், தொடரும் நடைமுறை சிக்கல்களையும் கவனத்தில் கொண்டு, அவைகளை களைந்து, ரியல் எஸ்டேட் துறையை செம்மைபடுத்தி, சீர் தூக்கி வலிமைப்படுத்தி, வளர்ச்சிக்குள்ளாக்கும் வகையில், இந்த ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் செயல்பட வேண்டும் என ரியல் எஸ்டேட் தொழில் முனை வோர்களும், வீட்டுமனை அபிவிருத்தியாளர்களும், வர்த்தகர்களும், கட்டுனர் களும், பொதுமக்களும் விரும்பு கின்றார்கள்.

ஆகவே இவைகளை கவனத் தில் கொண்டு தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் செயல் பாடுகளை எளிமைப்படுத்தி பொதுமக்கள் விண்ணப்பிக்கும் திட்டங்களை விரைவில் பதிவு செய்து உத்தரவிட கூடிய வகையில் வழிவகை செய்ய வேண்டும் எனவும், அதேபோன்று ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தில், பொதுமக்கள் தங்களின் திட்டங்கள் குறித்த கோப்புகளை விண்ணப்பித்து, ஒழுங்குமுறை ஆணையத்தால் முடிவெடுக்க ப்படாமல் நிலுவையில் உள்ள வைகளுக்கு தண்டத் தொகையை ரத்து செய்ய வேண்டுமெனவும், அவர்கள் மேற்கூறியவைகளை கவனத்தில் கொண்டு தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் விரைந்து தீர்வினைக்கான வழிவகை செய்ய வேண்டுமென ஃபெயிரா தலைவர் டாக்டர் ஆ.ஹென்றி கடிதம் எழுதி யுள்ளார்.

# ஆலங்குளத்தில் பள்ளி செல்லும் சாலையை அடைத்து பாலம் நடவடிக்கை எடுக்க கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு

தென்காசி, டிச : 14



தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் 4 வழிச்சாலை திட்டப்பணியில் பொதுமக்களை பாதிக்கின்ற வகையில் சாலை அமைப்பதாக கூறி திமுக, காங், பாஜக உள்ளிட்ட கட்சியினர் தென்காசி மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

மனு மீது நடவடிக்கை எடுக்கவில்லை எனில் போராட்டத்தில் ஈடுபட போவதாக கூறியுள்ளனர்.

தென்காசி திருநெல்வேலி நான்கு வழிச்சாலை திட்டபணி நடைபெற்று வரும் நிலையில் ஆலங்குளம் காவல் நிலையம் கீழ்புறம் தற்போது பாலம் அமைக்கப்பட்டு வரும் நிலையில் அந்த பாலம் அருகே செல்லக்கூடிய சாலையை அடைத்து பாலம் கட்டுவதாகவும் இதனால் அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு செல்லும் 3000 க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகள், புதுப்பட்டி கிராமத்திற்கு செல்லும் பாதை, நீதிமன்றத்திற்கு செல்லும் பாதை என அனைத்துமே அடைக்க கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே கட்டுமான பணி நடைபெற்று வரும் நிலையில் உடனடியாக இந்த பகுதிக்கு செல்லக்கூடிய வழியில் தரைப்பாலம் அமைத்து தர வேண்டி தென்காசி மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோரிடம் அனைத்து கட்சியினர் மற்றும் பொதுமக்கள் சார்பாக திமுக நகர செயலாளர் வக்கீல் நெல்சன் ஆலங்குளம் நகர காங்கிரஸ் தலைவர் வில்லியம் தாமஸ், ஆலங்குளம் பேரூராட்சி சேர்மன் சுதா மோகன்லால், பாஜக அன்புராஜ், திமுக முன்னாள் நகர தலைவர் பாப்புலர் செல்லத்துரை, பேரூராட்சி முன்னாள் துணை சேர்மன் தங்க செல்வம், வக்கீல் ராஜா, ஜெயபாலன், பெரியார் இயக்கம் குமார், காங்கிரஸ் லிவிங்ஸ்டன் விமல், கம்யூனிஸ்ட் பாலு, அமமுக சுப்பையா, தொழிலதிபர் செல்வன், தமிழ்புலி கார்த்திக், பாஜக கண்ணன்ன், நாம் தமிழர் நகர தலைவர் சுரேஷ் சொக்கலிங்கம், ஜெகன், மற்றும் ஏராளமானோர் திரண்டு வந்து கோரிக்கை மனு கொடுத்துள்ளனர்.

இந்த மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஒட்டுமொத்த மக்களையும் திரட்டி வருகின்ற வருகின்ற 17 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதம் மற்றும் போராட்டத்தில் ஈடுபட போவதாக கூறியுள்ளனர்.

# வத்தலக்குண்டுவில் இடைவிடாமல் கொட்டி தீர்த்த கனமழையால் பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

வத்தலகுண்டு டிச.14

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு பகுதிகளில் இடைவிடாமல் கொட்டி தீர்த்த கனமழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டது.தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது அதன்படி இரவு முதல் பல்வேறு பகுதிகளில் சாரல் மழை பெய்ய தொடங்கியது.

தற்போது கருமேகமூட்டமாக எப்பொழுதும் காட்சியளிக்கிறது இதன் காரணமாக பள்ளி களுக்கு விடுமுறை விடப் பட்டுள்ளது ஆனால் மாவட்ட நிர்வாகம் விடுமுறை எப்போது அறிவிப்பு வரும் என்ற எதிர்பார்ப்பில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இருந்து வந்தார்கள் மாவட்ட நிர்வாகம் மாணவர்களுக்கு விடுமுறை விடப்படுமா என்ற எதிர்பார்ப்பில் தகவல் அறிந்து கொள்ள அதிகாலையில் இருந்து டிவி மற்றும் வாட்ஸப்பில் குறுஞ் செய்தி மாவட்ட ஆட்சித்தலைவர் இடமிருந்து வருகிறதா என்ற நோக்கத்தில் மாணவர்களும் பெற்றோர்களும் இருந்து வந்தார்கள் பின்னர் ஒரு வழி யாக காலை 6:15 மணிக்கு பள்ளிகளுக்கு விடுமுறை என மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவித்ததை அடுத்து மாணவர்கள் மற்றும் பெற்றோர் கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர் இல்லை என்றால் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவிப்பு ஒன்பது மணிக்கு வந்தால் அவர்கள் மலையில் நனைந்த படியே சென்று அவதிக்குள்ளா வார்கள். அன்றாடம் வேலை செய்யும் கொத்தனார் சித்தாள் மற்றும் மற்ற வேலைக்காரர்கள் வேலைக்கு செல்ல முடியாமல் அவதியுற்று வருகிறார்கள்

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161